# ஐக்கிய அரபு அமீரகத்திற்கு பிரதமரின் பயணம் (பிப்ரவரி 13-14, 2024)

பிப்ரவரி 10, 2024

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 2024 பிப்ரவரி 13 முதல் 14 வரை ஐக்கிய அரபு அமீரகத்திற்கு (UAE) அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார்.

2. இது, 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐக்கிய அரபு அமீரகத்திற்குப் பிரதமர் திரு. மோடியின் ஏழாவது பயணமாகவும், கடந்த எட்டு மாதங்களில் மூன்றாவது முறை பயணமாகவும் இது அமைகிறது. இந்தப் பயணத்தின் போது, ஐக்கிய அரபு அமீரக அதிபர் திரு. ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அவர்களுடன் பிரதமர் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவார். இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்துவது, விரிவுபடுத்துவது மற்றும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து இரு தலைவர்களும் விவாதிப்பதோடு, பரஸ்பர நன்மை பயக்கும் பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்கள்.

3. ஐக்கிய அரபு அமீரகத்தின் துணை அதிபரும், பிரதமரும் மற்றும் பாதுகாப்பு அமைச்சருமான திரு. ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தூம் அவர்களையும் பிரதமர் சந்திக்க உள்ளார். அவரது அழைப்பை ஏற்று, துபாயில் நடைபெறவுள்ள உலக அரசு உச்சிமாநாடு 2024 இல் சிறப்பு விருந்தினராகப் பிரதமர் பங்கேற்று நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றுவார்.

4. அபுதாபியில் உள்ள முதல் இந்து கோயிலான BAPS ஆலயத்தைப் பிரதமர் திறந்து வைக்கிறார். பின்னர் அபுதாபியில் உள்ள சயீத் விளையாட்டு நகரில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய சமூகத்தினரிடையே அவர் உரையாற்றுவார்.

5. இந்தியாவும், ஐக்கிய அரபு அமீரகமும் வலுவான அரசியல், கலாச்சார மற்றும் பொருளாதார இணைப்புகளின் அடிப்படையில் இணக்கமான, நெருங்கிய மற்றும் பன்முக உறவுகளைக் கொண்டுள்ளன. பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 2015 ஆகஸ்ட் மாதத்தில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு மேற்கொண்ட வரலாற்றுச்

சிறப்புமிக்க பயணத்தைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் விரிவான மூலோபாய கூட்டாண்மையாக உயர்த்தப்பட்டன. எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாய் மற்றும் அரபு அமீரக திர்ஹம் (AED) பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக இரு நாடுகளும் 2022 பிப்ரவரி மாதத்தில் ஒரு விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் (CEPA) மற்றும் 2023 ஜூலை மாதத்தில் உள்ளூர் நாணயத் தீர்வு முறை (LCS) ஆகியவற்றில் கையெழுத்திட்டன.

6. 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 85 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான இருதரப்பு வர்த்தகத்துடன் இரு நாடுகளும் பரஸ்பர வர்த்தகப் பங்காளிகளாக உள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீடுகளின் அடிப்படையில் இந்தியாவில் முதலீடு செய்யும் முதல் நான்கு முதலீட்டாளர்களில் ஐக்கிய அரபு அமீரகமும் ஒன்றாகும்.

7. சுமார் 3.5 மில்லியன் வலுவான மற்றும் துடிப்பான இந்திய சமூகம் ஐக்கிய அரபு அமீரகத்தில் மிகப்பெரிய வெளிநாட்டவர் சமூகமாக உள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்துடனான நமது சிறந்த இருதரப்பு உறவுகளுக்கும் குடியிருக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் அவர்களின் நேர்மறையான மற்றும் நன்கு பாராட்டப்பட்ட பங்களிப்பு ஒரு முக்கிய அடித்தளமாக இருந்து வருகிறது.

**புது தில்லி**
**பிப்ரவரி 10, 2024**